மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 06 ம் நாள் சனிக்கிழமை

இ.மஎண்.05/2023
உள்
அசல் வழக்கு எண்.57/2021
---------

1. சுப்பம்மாள்
2. ராமர்
3. மாரிச்சாமி
4. ராமலட்சுமி
5. முருகலட்சுமி ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

தங்கமாரிமுத்து ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனு 03.11.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 20.12.2023–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.கணபதிராமன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சங்கர்ராம் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், மனுவை ஏற்று அ.வ.எண்.57/2021 மற்றும் அ.வ.எண்.02/2023 ஆகிய இரண்டு வழக்குகளையும் ஏக காலத்தில் (Simultaneously) விசாரணை செய்து தீர்ப்பு வழங்க வேண்டி 25.09.2023 ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

2) **<u>மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>**

மனுவில் கண்ட எதிர்மனுதாரர்/வாதி மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதில் வழக்குரை சொத்து முழுவதும் அவரது தகப்பனார் சுப்பையாவுக்கு பாத்தியப்பட்டதென்றும், அவர் காலமான பின்னர் எதிர்மனுதாரருக்கும் அவருடன் பிறந்தவர்களான மாரீஸ்வரன், முத்துமாரி, சின்னமுத்துமாரி, பூமாரி, மாரீஸ்வரி ஆகியோர்களுக்கு தபசில் சொத்து பாத்தியப்பட்டதென்றும், அதனால் எதிர்மனுதாரருக்கு முத்துமாரி, சின்னமுத்துமாரி, பூமாரி, மாரீஸ்வரி மற்றும் எதிர்மனுதாரர்களின் உடன்பிறந்த சகோதரர் மாரீஸ்வரனின் வாரிசுகளான முத்துமாரி, பெரியராஜா, பெரியசாமி ஆகியோர்களும் வழக்குரை தபசில் சொத்தைப் பொறுத்து 24.09.2020ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும், மேற்படி கிரையத்தின் அடிப்படையில் தான் மட்டுமே உரிமையாளர் என்று கூறி அசல் வழக்கான அ.வ.எண்.57/2021 ஐ மனுதாரர்கள் மீது தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்கள் ஆஜராகி எதிர்வழக்குரையுடன் எதிர்பாத்திய கோரிக்கையாக வழக்குரை தபசில் சொத்தில் வடபுறபகுதி மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டதென்று விளம்புகை செய்யக்கோரியும், தொடர்ச்சியாக உறுத்துக்கட்டளை பரிகாரமும் கேட்டுள்ளார்கள். வழக்குரை சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரருக்கு முத்துமாரி, சின்னமுத்துமாரி, பூமாரி, மாரீஸ்வரி, முத்துமாரி, பெரியராஜா, பெரியசாமி ஆகியோர்கள் 24.09.2020ம் தேதி எழுதிக் கொடுத்துள்ள மோசடியான கிரைய ஆவணத்தைப் பொறுத்து, மேற்படி அசல் வழக்கில் எவ்வித பரிகாரமும் கேட்கவில்லை. ஏனென்றால் மேற்படி மோசடி கிரையம் எழுதிக் கொடுத்த நபர்கள் அனைவரும், மேற்படி அசல் வழக்கில் தரப்பினராக இல்லை. எனவே, மேற்படி மோசயடி ஆவணத்தைப் பொறுத்து வழக்கு மூலம், கிரையம் எழுதி வாங்கிய எதிர்மனுதாரருக்கு எதிராகவும், மேற்படி கிரையம் எழுதிக் கொடுத்த நபர்களுக்கு எதிராகவும் இருந்து வருவதால், மேற்படி 24.09.2020ம் தேதிய கிரைய ஆவணம் சட்டபபடி செல்லத்தக்கதல்ல. இல்லாநிலையது என்று பரிகாரம் வேண்டி எதிர்மனுதாரரையும், அவருக்கு கிரையம் எழுதிக் கொடுத்த அனைத்து நபர்களையும்

உள்ளடக்கிய அசல் வழக்கான அ.வ.எண்.02/2023 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அதில் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்துவருகிறது. மேற்படி 24.09.2020ம் தேதியில் எதிர்மனுதாரருக்கு முத்துமாரி, சின்னமுத்துமாரி, பூமாரி, மாரீஸ்வரி, முத்துமாரி, பெரியராஜா, பெரியசாமி ஆகியோர்கள் எழுதிக் கொடுத்த கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதா? என்பது குறித்து முடிவு எடுத்தால் மட்டுமே அ.வ.எண்.57/2021ல் ஒரு சிறந்த இறுதி முடிவை எடுக்கமுடியும்.

மேற்படி மோசடியான 24.09.2020ம் தேதிய கிரைய ஆவணத்தின் அடிப்படையில் எதிர்மனுதாரர் அ.வ.எண்.57/2021ஐ தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் வாதி தரப்பு 1வது சாட்சி முதல்நிலை விசாரணை முடிந்து பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. மனுதாரர்கள் மேற்படி மோசடி கிரைய ஆவணத்தை இல்லாநிலையது என்று விளம்புகை பரிகாரம் வேண்டி அ.வ.ண்.02/2023 என்ற வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. எனவே, அ.வ.எண்.57/2021, அ.வ.எண்.02/2021 ஆகிய இரண்டு வழக்குகளையும் ஏக காலத்தில் விசாரணை செய்து தீர்பபு வழங்கினால் மட்டுமே இரண்டு வழக்குகளிலும் ஒரு சிறந்த முடிவை எடுக்க இயலும் என்பதால் மேற்கண்ட அ.வ.எண்.57/2021 மற்றும் அ.வ.எண்.02/2023 ஆகிய இரண்டு வழக்குகளையும் ஏக காலத்தில் விசாரணை செய்து தீர்ப்பு வழங்க உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>:-

தாவா வழக்கில் (அ.வ.எண்.57/2021) வாதியின் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அ.வ.எண்.02/2023 வழக்கின் பிராது நிலைநிற்கக்கூடியதா? இல்லையா? என்பது கேள்வியாக உள்ளது. எனவே, அதை தீர்மானிப்பதற்காக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நிலுவையில் உள்ளது. அவ்வாறு இருக்கும் சூழ்நிலையில் தாவா வழக்கையும் (அ.வ.எண்.57/2021) மற்றொரு வழக்கான அ.வ.எண்.02/2023 வழக்கையும் ஆக இரு வழக்குகளையும் ஏக காலத்தில் விசாரணை செய்ய கோருவது

ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அதனால் வாதியை பிரதிவாதிகள் ஏக கால விசாரணைக்கு கட்டாயப்படுத்த முடியாது. எனவே, மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். அ.வ.எண்.02/2023 ல் 2 முதல் 8 பிரதிவாதிகள் அ.வ.எண்.57/2021 வழக்கில் தரப்பினர்கள் இல்லை. மேலும், ஒரு வழக்கின் விசாரணை ஆரம்பிக்கப்பட்டு மற்றொரு வழக்கின் விசாரணை தொடங்கப்படாத சூழ்நிலையில் Simultaneous Trial (ஏக கால விசாரணை) அல்லது Joint Trial என்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. எனவே, தாவா மனுவை எதிர்மனுதாரர்/வாதி செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

6) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

7) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

8) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>9) தீர்வு</u>:-

மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் எதிர்பாத்திய கோரிக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. தபசில் சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாருக்கு முத்துமாரி, சின்னமுத்துமாரி, பூமாரி, மாரீஸ்வரி, முத்துமாரி, பெரியராஜா, பெரியசாமி ஆகியோர்கள் 24.09.2020 ம் தேதி எழுதிக் கொடுத்துள்ள மோசடியான கிரைய ஆவணத்தைப் பொறுத்து அசல் வழக்கில் எவ்வித பரிகாரமும் கோரவில்லை. மேற்படி மோசடி ஆவணம் எழுதிக் கொடுத்த நபர்கள் அனைவரும் அசல் வழக்கில் தரப்பினராக இல்லை. எனவே, மேற்படி மோசடி ஆவணத்தைப் பொறுத்து வழக்குமூலம் கிரையம் எழுதி வாங்கிய எதிர்மனுதாரருக்கு எதிராகவும், கிரைய ஆவணத்தை எழுதிக் கொடுத்த நபர்களுக்கு எதிராகவும் இருந்து வருவதால் இந்த எதிர்மனுதாரரையும் அவருக்கு கிரையம் எழுதிக் கொடுத்த அனைத்து நபர்களையும் சேர்த்து

அ.வ.எண்.02/2023 வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.வ.எண்.02/2023 வழக்கானது 24.09.2020ம் தேதிய கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல, இல்லா நிலையது என்று விளம்புகை செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட ஒன்றாகும். இந்த வழக்கு வாதி தாவா சொத்தை அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இரண்டு பரிகாரங்களும் வெவ்வேறானவை. இந்த வழக்கைப் பொறுத்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை CRP (MD) No.1391/2023 and CMP (MD) No.6900/2023ல் அ.வ.எண்.57/2021 வழக்கினை அந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 15 மாதங்களுக்குள் முடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் இரண்டு வழக்குகளும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டுமென யாதொரு உத்தரவையும் பெற்று வரவில்லை. மேலும், இந்த வழக்கு வா.சா.1 குறுக்குவிசாரணைக்காக உள்ளது. இரண்டு வழக்கிலும் உள்ள பரிகாரங்கள் வெவ்வேறானவை என்பதால், இரண்டு வழக்குகளையும் ஏக காலத்தில் நடத்த வேண்டிய அவசியமும் இல்லை.

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக இல்லை. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கம் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக உள்ளது. மனுதாரரால் மனுவை ஏற்று அ.வ.எண்.57/2021 மற்றும் அ.வ.எண்.02/2023 ஆகிய இரண்டு வழக்குகளையும் ஏக காலத்தில் (Simultaneously) விசாரணை செய்து தீர்ப்பு வழங்க வேண்டி 25.09.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள், மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவு மற்றும் நீதியின்பால் கொண்ட

அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, மனுவை ஏற்று அ.வ.எண்.57/2021 மற்றும் அ.வ.எண்.02/2023 ஆகிய இரண்டு வழக்குகளையும் ஏக காலத்தில் (Simultaneously) விசாரணை செய்து தீர்ப்பு வழங்க வேண்டி 25.09.2023ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை தள்ளுபடி செய்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 06ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.